செ.வெ. எண் : 545 நாள் : 23.8.2007

# செய்தி வெளியீடு – 23.8.2007

**மாநில தகவல் தொழில்நுட்பவியல் பணி முனைப்புக் குழுவின் முதல் கூட்டம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் 23.8.2007 அன்று தலைமைச்செயலகத்தில் நடைபெற்றது.**

**இக்கூட்டத்தில், மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தமிழ்நாட்டை மென்பொருள் மட்டுமல்லாது வன்பொருள் துறையிலும் இந்திய அளவில் முதல் இடத்தை அடைவதற்கு அரசு உறுதிபூண்டுள்ளது என்று தெரிவித்தார். தகவல் தொழில்நுட்பவியல் புரட்சியின் பலன்கள் கோயம்புத்துார், மதுரை, திருச்சி, சேலம், திருநெல்வேலி மற்றும் ஓசூர் போன்ற நகரங்களுக்கு பரவச்செய்ய தமிழக அரசு எடுத்துவரும் பல்வேறு முயற்சிகளைப் பற்றி விரிவாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்துரைத்தார். தகவல் தொழில்நுட்பவியல் துறையை மேலும் மேம்படுத்த குழுவின் மேலான கருத்துக்களை கேட்டறிந்தார்.**

**தகவல் தொழில்நுட்ப வளர்ச்சிக்கு குழு உறுப்பினர்கள் பல அரிய கருத்துக்களை வழங்கினர். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த யோசனைகளின் மீது தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் இவை தமிழக அரசின் புதிய தகவல் தொழில்நுட்பவியல் கொள்கையில் சேர்க்கப்படும் என்றும் உறுதியளித்தார்.**

**இக்கூட்டத்தில் பங்கேற்றவர்கள் பின்வருமாறு:**

**மாண்புமிகு மத்திய தொலைத்தொடர்பு மற்றும்**
**தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் – துணைத்தலைவர்**

**உறுப்பினர்கள்:**

**1. திரு.கோபால் ஸ்ரீனிவாசன் (சிஐஐ)**
**2. டாக்டர் எம்.அனந்தகிருஷ்ணன் (மிட்ஸ்)**
**3.திரு என்.மகாலிங்கம் ( டிசிஎஸ்)**
**4.டாக்டர் அனந்த் (ஐஐடி)**
**5.திரு.லஷ்மிநாராயணன் (சிடிஎஸ்)**

**6.டாக்டர் டி.விஸ்வநாதன் (அண்ணா பல்கலைக்கழகம்)**
**7.திரு.ரஞ்சித் நரசிம்மன் (எச்சிஎல்)**
**8.திரு. லஷ்மண் படிகா (விப்ரோ)**
**9.திரு.அருண் (ஸ்பெல்)**
**10.திரு அருண் ஜெயின்(போலாரிஸ்)**
**11.திரு.எச்.ஆர்.பினோத்(இன்போஸிஸ்)**
**12.டாக்டர் டி.சுப்பு சுப்ரமணியம்(சத்யம்)**
**13.திரு. அசோக் பக்தவச்சலம் (கேஜி குழு)**
**14.திரு. ஏ.குருராஜ்(பிளக்ஸ்ட்ரானிக்ஸ்)**
**15.திரு பிரமோத் ஜெயின்(டெல்)**
**16.திரு.பிரேமநாதன் (சிஐஐ, திருச்சி)**
**17.திரு.புருஷோத்தமன்(நாஸ்காம்)**
**18. திரு.ஸ்ரீராம் ஐயர் (சி.ஐ.ஐ., சென்னை)**
**19. திரு.சபியாசச்சி பத்ரா (நோக்கியா)**

**அலுவலர்கள்:**
**20. தலைமைச் செயலாளர்**
**21. கூடுதல் செயலாளர், மத்திய தகவல் தொழில்நுட்பத் துறை**
**22. செயலாளர், தகவல் தொழில்நுட்பவியல் துறை**
**23. செயலாளர், தொழில்துறை**
**24. செயலாளர், நிதித்துறை**
**25. மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மின்னணு நிறுவனம்**
**26. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில்வளர்ச்சிக் கழகம்**
**27. தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு தொழில் முன்னேற்ற நிறுவனம்**
**28. துணை இயக்குநர், தேசிய தகவல் மையம்**
**29. இயக்குநர், தொழில் வழிகாட்டி நிறுவனம்**
**30. இயக்குநர், மின் ஆளுமை**
**31. இயக்குநர், இந்திய மென்பொருள் பூங்கா**

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.